V10SS www.Padasalai.Net www.CBSEtips.in

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
காலாண்டு பொதுத்தேர்வு - 2023

கால அளவு: 3.00 மணிநேரம் வகுப்பு 10
சமூக அறிவியல் மதிப்பெண்கள்: 100

பகுதி - I

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினை சேர்த்து எழுதவும். 14×1=14

1) பன்னாட்டு சங்கத்தின் முதல் பொதுச் செயலாளர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ்
இ) டச்சு ஈ) அமெரிக்கா ஐக்கிய நாடுகள்

2) எப்போது ஐக்கிய நாடுகள் சபையின் பட்டயசாசனம் கையெழுத்தானது?
அ) ஜூன் 26, 1942 ஆ) ஜூன் 26, 1945
இ) ஜனவரி 1, 1942 ஈ) ஜனவரி 1, 1945

3) சரியான வாக்கியங்களைத் தேர்வு செய்க.
கூற்று அமெரிக்காவின் மார்ஷல் திட்டம் போரில் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் மறு நிர்மாணத்திற்காக முன்வைக்கப்பட்டது.
காரணம் அமெரிக்க நாடு அத்திட்டத்தின் மூலம் மேற்கு ஐரோப்பிய நாடுகளைத் தன்பால் செல்வாக்கின் கீழ் கொண்டுவர நினைத்தது
அ) கூற்றும், காரணமும் சரி ஆனால் காரணம் கூற்றினை சரியாக விளக்கவில்லை
ஆ) கூற்றும் காரணமும் தவறானவை
இ) கூற்றும் காரணமும் சரி காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது
ஈ) கூற்று தவறு காரணம் சரி

4) 'சத்யார்த்த பிரகாஷ்' என்னும் நூலின் ஆசிரியர் யார்?
அ) தயானந்த சரஸ்வதி ஆ) அயோத்திதாசர்
இ) அன்னிபெசன்ட் ஈ) சுவாமி சாரதாநந்தா

5) யாருடைய ஆக்கிரமிப்போடு மெக்சிகோ நாகரிகம் நிலைகுலைந்து போயிற்று?
அ) ஜெர்மன் கோர்ட்ஸ் ஆ) பிரான்சிஸ்கோ பிசாரோ
இ) தௌசெயின்ட் லாவெர்ட்டியூர் ஈ) முதலாம் பெட்ரோ

6) பழைய வண்டல் மண் படிவுகளால் உருவான சமவெளி ................
அ) பாபர் ஆ) தராய் ஆ) பாங்கர் ஈ) காதர்

7) கேரளா மற்றும் கர்நாடக கடற்கரைப் பகுதிகளில் விளையும் மாங்காய்கள் விரைவில் உதிர்வதற்கு ............... காற்றுகள் உதவுகின்றன.
அ) லூ ஆ) நார்வெஸ்டர்ஸ்
இ) மாஞ்சாரல் ஈ) ஜெட் காற்றோட்டம்

8) உலகிலேயே மிக நீளமான அணை ..........
அ) மேட்டூர் அணை ஆ) கோசி அணை
இ) ஹிராகுட் அணை ஈ) பக்ராநங்கல் அணை

9) தாமிர படிவு அதிகமுள்ள மாநிலம் ..........
அ) கேரளா ஆ) ஒடிசா இ) இராஜஸ்தான் ஈ) பீகார்

10) .......... போக்குவரத்து நேரடியாக உற்பத்தியாளர்களையும் நுகர்வோரையும் இணைக்கிறது.
அ) ரயில்வே ஆ) சாலை இ) வான்வழி ஈ) நீர்வழி

11) கீழ்காணும் எந்த மாநிலங்கள் பொதுவான உயர் நீதிமன்றத்தைப் பெற்றுள்ளன?
அ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரபிரதேசம் ஆ) கேரளா மற்றும் தெலுங்கனா
இ) பஞ்சாப் மற்றும் ஹரியானா ஈ) மகாராஷ்டிரா மற்றும் குஜராத்

12) ஒரு மசோதாவை நிதி மசோதா அல்லது இதர மசோதா எனத் தீர்மானிக்கும் அதிகாரம்
அ) குடியரசு தலைவர் ஆ) இந்திய அரசின் வழக்குரைஞர்
இ) நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஈ) லோக்சபாவின் சபாநாயகர்

13) .......... என்பது உடல் நலம் மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான உணவை வழங்கும் அல்லது பெறும் செயல் முறையாகும்.
அ) ஆரோக்கியம் ஆ) ஊட்டச்சத்து இ) சுகாதாரம் ஈ) பாதுகாப்பு

14) கீழ்க்கண்டவற்றுள் எது வர்த்தகக் கொள்கை
அ) நீர்ப்பாசன கொள்கை ஆ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கை
இ) நிலச் சீர்திருத்தக் கொள்கை ஈ) கூலிக்கொள்கை

பகுதி - II

எவையேனும் 10 வினாக்களுக்கு விடை அளிக்கவும். 10×2=20
(வினா எண் 28க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)

15) மூவர் கூட்டுநாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
16) பிரிட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
17) இராமலிங்க அடிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறுகுறிப்பு வரைக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

18) முத்து துறைமுக நிகழ்வை விவரி.
19) முசோலியின் ரோமாபுரி நோக்கிய அணிவகுப்பின் விளைவுகள் யாவை?
20) காலநிலையை பாதிக்கும் காரணிகளை பட்டியலிடுக.
21) நிலக்கரியின் வகைகளை அதன் கரிம அளவுகளுடன் குறிப்பிடுக.
22) தகவல் தொடர்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
23) இந்திய திட்ட நேரத்தின் முக்கியத்துவம் பற்றிக் கூறுக.
24) இந்தியாவின் வேளாண்மை முறைகளைக் குறிப்பிடுக.
25) அரசியலமைப்பு என்றால் என்ன?
26) நடுவண் அரசின் அமைச்சர்கள் தரநிலைகளின் படி எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளனர்?
27) உலகமயமாக்கல் என்றால் என்ன?
28) உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் மூன்று அடிப்படை கூறுகள் யாவை?

## பகுதி - III

**10×5=50**

**எவையேனும் 10 வினாக்களுக்கு விடை அளிக்கவும்.**
**(வினா எண் 42க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)**

29) **கோடிட்ட இடங்களை நிரப்புக.**
   i) ............ ஆல் உலகமயமாக்கல் என்ற பதம் கண்டுபிடிக்கப்பட்டது.
   ii) நாடாளுமன்ற இரு அவைகளிலும் உரையாற்றவும் கூட்டத்தொடரில் பங்கு கொள்ளவும் உரிமை பெற்றவர் ............
   iii) புனே சர்வஜனிக் சபாவை நிறுவியவர் ...............
   iv) வடகிழக்கு பருவக்காற்றின் காலம் ............
   v) ஐரோப்பிய குழுமத்தின் தலைமையகம் .......... நகரில் அமைந்துள்ளது.
30) உலகப் போர்களுக்கிடைப்பட்ட காலத்தில் (1919 - 39) இந்தியாவில் காலனி நீக்கச் செயல்பாடுகள் எவ்வாறு நடைபெற்றன என்பதனைக் குறித்து வரிசையாக விவரிக்க முயற்சி செய்யவும்.
31) இரண்டாம் உலகப் போரின் விளைவுகளை ஆய்வு செய்க.
32) பன்னாட்டுச்சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.
33) அ) வேறுபடுத்துக.
   i) மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகள்
   ii) உள்நாட்டு வணிகம் மற்றும் பன்னாட்டு வணிகம்
   ஆ) காரணம் கூறுக. மலைப்பகுதிகள் சமவெளிகளை விடக் குளிரானவை
34) தென்மேற்குப் பருவக்காற்று குறித்து எழுது.
35) இந்தியத் தொழிலகங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி எழுதுக.
36) நெல் மற்றும் கோதுமை பயிரிடுவதற்கு ஏற்ற புவியியல் சூழல்கள் பற்றி விவரி.
37) அடிப்படை உரிமைகளுக்கும் அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளை குறிப்பிடுக.
38) முதலமைச்சரின் அதிகாரம் மற்றும் பணிகளை விவரி.
39) GDP ஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி.
40) பன்னாட்டு நிறுவனங்களின் நன்மைகள் மற்றும் தீமைகளை சுருக்கமாக எழுது.
41) காலக்கோடு வரைக: 1920 முதல் 1950 வரையிலான ஆண்டுகளுக்கு உட்பட்ட உலக வரலாற்று முக்கிய 5 நிகழ்வுகளை எழுதுக.
42) உலக வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிக்கவும்.
   i) ஜெர்மனி ii) ஜப்பான் iii) இத்தாலி iv) ஆஸ்திரிய -ஹங்கேரி
   v) சான் பிரான்சிஸ்கோ

## பகுதி - IV

**2×8=16**

**பின்வரும் வினாக்களுக்கு விடை அளிக்கவும்.**

43) அ) முதல் உலகப் போருக்கான முக்கிய காரணங்களை விவாதி

**(அல்லது)**

ஆ) இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.

44) அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்காணும் இடங்களை குறிக்கவும்.

| | |
|---|---|
| i) மேற்கு தொடர்ச்சி மலைகள் | v) இயற்கை எரிவாயு மையம் |
| ii) சோட்டா நாகபுரி பீடபூமி | vi) வண்டல் மண் கிடைக்கும் பகுதி |
| iii) தேயிலை விளையும் பகுதி | vii) காவிரி ஆறு |
| iv) மன்னார் வளைகுடா | viii) வடகிழக்கு பருவக்காற்று வீசும் திசை |

**(அல்லது)**

ஆ)

| | |
|---|---|
| i) காரகோரம் மலைத்தொடர் | v) பன்னாட்டு விமான நிலையம் |
| ii) சுந்தரவன காடுகள் | vi) தென்மேற்குப்பருவக்காற்று வீசும்திசை |
| iii) ஹிராகுட் அணை | vii) கரிசல்மண் காணப்படும் பகுதி |
| iv) பன்னாஉயிர் பாதுகாப்பு பெட்டகம் | viii) நர்மதா ஆறு |

\- - - - - -

Kindly send me your study materials to padasalai.net@gmail.com